# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## மருத்துவம் (திருத்தம்)

***(105 ஆம் அத்தியாயமான) மருத்துவ கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் அவர்களால்*
*2016, செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2016, யூன் மாதம் 13 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***136 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2 :** இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப் படும்) (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, புதிய பிரிவு 43அ என்பதன் ஏற்பாடுகளுக்கு இசைவாக 43 ஆம் பிரிவில் விளைவாந்தமையினதான திருத்தங்களைக் கூட்டிணைப்பதற்கானதாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம் முதன்மைச்சட்டவாக்கத்தில் புதிய பிரிவுகள் 43அ மற்றும் 43ஆ என்பவற்றை உட்புகுத்துகின்றதென்பதுடன், புதிய பிரிவுகள் முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் பல்வைத்தியர்களைத் தற்காலிகமாகப் பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்வதற்கும் மற்றும் தற்காலிகமாகப் பல்வைத்தியர்களாகப் பதிவு செய்யப்பட்ட ஆட்களின் உரிமைகளுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதாகும்.

## மருத்துவம் (திருத்தம்)

ச.வ.ஓ 64/2007

### (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின்        ஆம் இலக்க, மருத்துவ (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*105 ஆம் அத்தியாயத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 43 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில் "பட்டமளிக்கின்ற நிறுவகமொன்றினால் சூட்டப்பட்டதான அல்லது வழங்கப்பட்டதான பல்வைத்தியப் பட்டமொன்றை அல்லது திப்புளோமா ஒன்றை வைத்திருப்பவராகவும் இருந்தாலொழிய", என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பட்டமளிக்கின்ற நிறுவகமொன்றினால் சூட்டப்பட்டதான அல்லது வழங்கப்பட்டதான பல்வைத்தியப் பட்டமொன்றை அல்லது திப்புளோமா ஒன்றை வைத்திருப்பவராகவும் 43அ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் மருத்துவப் பேரவையினால் வழங்கப்பட்டதான சான்றிதழொன்றை வைத்திருப்பவராகவும் இருந்தாலொழிய," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அதன் (1அ) என்னும் உட்பிரிவில் அதற்கான (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :-

"(இ) மருத்துவப் பேரவையினால் அதற்கென விதித்துரைக்கப்பட்ட விசேட பரீட்சையொன்றில் தேறியிருப்பின் ; அத்துடன்

2-PL 009970-425 (2016/05)

(ஈ) 43அ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் மருத்துவப் பேரவையினால் வழங்கப்பட்ட தான சான்றிதழொன்றை வைத்திருப்பவராக விருப்பின்,";

(3) அதன் (2) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(2) ஒரு பல்வைத்தியராகப் பதிவுசெய்யப்படுவதற்கான கட்டணம், பதிவாளருக்கு விண்ணப்பத்தின் மீது செலுத்தப்படற்பாலதான விதித்துரைக்கப்பட்ட தொகையாதல் வேண்டும்.".

(4) அதன் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(4) மருத்துவப் பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட சிறப்பறிஞர் தகைமையொன்றாக விதித்துரைக்கப்பட்ட தகைமையொன்றைப் பெறுகின்ற எவரேனும் பல்வைத்தியருக்கு, விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின் மீது விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கான சிறப்பறிஞரான பல்வைத்தியர் உரிமமொன்று, அத்தகைய உரிமத்தில் விதிக்கப்பட்ட நியதிகளுக்கமைவாக வழங்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 43அ மற்றும் 43ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், அவை, அச்சட்டவாக்கத்தின் 43அ மற்றும் 43ஆ எனும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"பல்வைத்தியர்களின் தற்காலிகமான பதிவு.

43அ. (1) ஆளொருவர், பின்வருபவராக இருப்பின், (3) ஆம் உட்பிரிவின் கீழான சான்றிதழொன்றைப் பெறுவதற்காக மருத்துவப் பேரவையினால் தேவைப்படுத்தப்பட்ட அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக மட்டும் பல்

வைத்தியரொருவராகத் தற்காலிகமாகப் பதிவு செய்யப்படுவதற்காக மருத்துவப் பேரவைக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்:-

(அ) நற்குணம் கொண்டவராகவிருப்பின்;

(ஆ) இலங்கைப் பிரசையாகவிருப்பின் ; அத்துடன்

(இ) (i) இலங்கைப் பல்கலைக்கழகத்தின் அல்லது நேரொத்த பல்கலைக்கழகமொன்றின் அல்லது பட்டமளிக்கின்ற நிறுவகமொன்றின் பல்அறுவை வைத்திய இளமாணிப் பட்டத்தை வைத்திருப்பவராகவிருப்பின் ; அல்லது

(ii) இலங்கைப் பல்கலைக்கழகத்தின் அல்லது நேரொத்த பல்கலைக்கழகமொன்றின் அல்லது பட்டமளிக்கின்ற நிறுவகமொன்றின் பல் அறுவை வைத்திய இளமாணிப் பட்டத்தைப் பெறுவதற்கு அவசியமான பரீட்சையில் தேறியிருந்து ஆனால் அப்பட்டத்தை அவருக்குச் சூட்டுவதில் அப்பல்கலைக்கழகத்தின் தாமதம் காரணமாக அப்பட்டத்தைப் பெற்றிராவிடின் அல்லது அப்பட்டத்தைப் பெறுவதற்குத் தேவைப்பட்ட தொழிற்பயிற்சிக் காலப்பகுதியை அவர் பூர்த்திசெய்யவில்லையென்ற நிகழ்வு காரணமாக அப்பட்டத்தைப் பெற்றிராவிடின் ; அல்லது

(ஈ) (i) இலங்கை தவிர்ந்த வேறு ஏதேனும் நாட்டின் ஏதேனும் பல்கலைக்கழகத்தின் அல்லது பல்வைத்தியப் பாடசாலையிலிருந்து பெறப்பட்டதும், அத்தகைய பல்கலைக்கழகத்தின் அல்லது பல்வைத்தியப் பாடசாலையின் பல்வைத்திய கல்வித் தரத்தினைக் கருத்திற்கொண்டு இப்பிரிவின் நோக்

கங்களுக்காக மருத்துவப் பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டதுமான பல் அறுவைவைத்திய இளமாணிப் பட்டத்தினை அல்லது அதற்குச் சமமான தான தகைமையை வைத்திருப்பவராக விருப்பின் ;

(ii) இலங்கை தவிர்ந்த வேறேதேதும் நாட்டின் ஏதேனும் பல்கலைக்கழகத்திலிருந்து அல்லது பல்வைத்தியப் பாடசாலையிலிருந்து பெறப்பட்டதும், அத்தகைய பல்கலைக்கழகத்தின் அல்லது பல்வைத்தியப் பாடசாலையின் பல்வைத்தியத்திலான தரத்தைக் கருத்திற்கொண்டு இப்பிரிவின் நோக்கங்களுக்காக மருத்துவப் பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டதுமான பல் அறுவைவைத்திய இளமாணிப் பட்டத்தை அல்லது அதற்குச் சமமான தகைமையைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான பரீட்சையில் தேறியிருந்து, ஆனால் அப்பட்டத்தைப் பெறுவதற்குத் தேவைப்பட்ட தொழிற் பயிற்சிக் காலப்பகுதியை அவர் பூர்த்தி செய்யவில்லையென்ற நிகழ்வு காரணமாக அப்பட்டத்தைப் பெற்றிராமலிருந்து மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதி அத்தொழிற் பயிற்சிக் காலப்பகுதியை இலங்கையில் பூர்த்திசெய்வதற்கு அவருக்கு அனுமதியளித்திருந்தால் ; அத்துடன்

(iii) மருத்துவப் பேரவையினால் அதற்கென விதித்துரைக்கப்பட்ட விசேட பரீட்சையில் தேறியிருப்பின்.

(2) ஒரு பல்வைத்தியராகத் தற்காலிகமாகப் பதிவுசெய்யப்படுவதற்கான விதித்துரைக்கப்பட்ட

*கட்டணம், பதிவுசெய்யப்படுவதற்கான விண்ணப்பம் செய்யப்படுவதன் மேல் பதிவாளருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.*

*(3) (அ) பல்வைத்தியராக தற்காலிகமாகப் பதிவு செய்யப்பட்ட ஆளொருவர் இப்பிரிவின் கீழான சான்றிதழொன்றுக்காக மருத்துவப் பேரவைக்கு விண்ணப்பிக்குமிடத்தும், மருத்துவப் பேரவைக்கு ஏற்புடையதாகவுள்ள தொழிற்பயிற்சிச் சான்றிதழொன்றையும் காண்பிப்பதன் மேல் அவர் பின்வருமாறு செய்துள்ளாரென மருத்துவப் பேரவை திருப்திப்படுமிடத்தும், மருத்துவப் பேரவை, 43ஆம் பிரிவின்கீழ் பல்வைத்தியரொருவராகப் பதிவு செய்யப்படுவதற்கு அவசியமான அனுபவத்தை அத்தகைய ஆள் பெற்றுள்ளாரெனப் பேரவை திருப்திப்படுகின்றது என்ற பொருள்பட விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் ஒரு சான்றிதழை வழங்குதல் வேண்டும் :-*

(i) *ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் அல்லது நிறுவனங்களில் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குத் தொழிலில் ஈடுபட்டிருந்துள்ளாரென்றும் ;*

(ii) *பந்தி* (i) *இல் குறிப்பிட்டவாறு அவரது தொழிலின் போது ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட துறையில் பல்வைத்தியத் தொழில் புரிகையில் அங்கீகரிக்கப்பட்ட காலப்பகுதிக்கு ஈடுபட்டிருந்துள்ளாரென்றும் ; அத்துடன்*

(iii) *அவ்வாறு தொழிலுக்கமர்த்தப்பட்டிருக்கையில் திருப்திகரமான சேவையைப் புரிந்துள்ளாரென்றும்.*

*(ஆ) 43 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பட்டமொன்றை வைத்திருப்பவரும் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்காக இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே ஒன்று*

அல்லது அதற்கு மேற்பட்ட மருத்துவமனைகளில் அல்லது நிறுவனங்களில் பல்வைத்தியத்தொழில் புரிகையில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளவரு மான எவரேனுமாளுக்கு, அவரது தொழிலின் போது, இக்கட்டளைச் சட்டத்தினால் தேவைப் படுத்தப்படுகின்றவாறான ஏதேனும் அங்கீகரிக்கப் பட்ட துறையில் அத்தகைய பல்வைத்தியத் தொழில் புரிகையில் அத்தகைய ஆள் ஈடுபட்டிருந்தாரென மருத்துவப் பேரவை திருப்திப்பட்டால், மருத்துவப் பேரவையினால் இப்பிரிவின் கீழான சான்றித ழொன்று வழங்கப்படலாம்.

(இ) இப்பிரிவின் நோக்கங்களுக்காக,

''அங்கீகரிக்கப்பட்டவொரு மருத்துவனை அல்லது நிறுவனம்'' என்பது, சுகாதார சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதியினால் மருத்துவப் பேரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மருத்துவமனை கள் மற்றும் நிறுவனங்கள் பற்றிய நிரலொன்றி லிருந்து மருத்துவப் பேரவையினால் அங்கீகரிக்கப் பட்ட ஒரு மருத்துவமனை அல்லது நிறுவனம் என்று பொருளாகும்;

"அங்கீகரிக்கப்பட்ட காலப்பகுதி" என்பது, அங்கீ கரிக்கப்பட்ட துறையில் பல்வைத்தியத் தொழில் புரிகை தொடர்பாக, அத்துறை தொடர்பாக நாட்டின் மருத்துவத் தேவைக ளைக் கருத்திற் கொண்டு மருத்துவப் பேரவை யினால் அங்கீகரிக்கப்பட்டவொரு காலப்பகுதி என்று பொருளாகும் ;

"அங்கீகரிக்கப்பட்ட துறைகள்" என்பது, வாய் முக மேல் தாடை எலும்பு அறுவைச் சிகிச்சை, பல் மறுசீரமைப்பியல் மற்றும் பல் அமைவியல் என்று பொருளாகும் ;

"தொழிற்பயிற்சி பற்றிய சான்றிதழ்" என்பது, ஒரு பல்வைத்தியராகத் தற்காலிகமாகப் பதிவு செய் யப்பட்ட ஆளொருவர் தொடர்பாக, வதிவுள்ள தன்மையில் அவர் எந்த மருத்துவமனையில் அல்லது நிறுவனத்தில் தொழிலுக்கமர்த்தப் பட்டாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ

மனையின் அல்லது நிறுவனத்தின் தலைவரினால் கையொப்பமிட்டதும், அவர் அவ்வாறு தொழிலுக்கமர்த்தப்பட்ட காலப்பகுதியைக் குறித்துரைக்கின்றதுமான ஒரு சான்றிதழ் என்று பொருளாகும்;

"மதிப்பீட்டுச் சான்றிதழ்" என்பது, ஒரு பல்வைத்தியராகத் தற்காலிகமாகப் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவர் தொடர்பாக, அவர் எந்த அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனையில் அல்லது நிறுவனத்தில் வதிவுள்ள தன்மையில் தொழிலுக்கமர்த்தப்பட்டாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனையின் அல்லது நிறுவனத்தின் தலைவரினால் கையொப்பமிடப்பட்டதும், ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட துறையில் அவர் பல்வைத்தியத் தொழில் புரிகையில் ஈடுபட்டிருந்த காலப்பகுதியைக் குறித்துரைக்கின்றதுமானவொரு சான்றிதழ் என்று பொருளாகுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு துறையிலும் அத்தகைய ஆளின் செயல்நிறைவேற்றுகையின் மதீப்பீடொன்றையும் உள்ளடக்கும்.

*பல்வைத்தியர்களாகத் தற்காலிகமாகப் பதிவு செய்யப்பட்ட ஆட்களின் உரிமைகள்.*

**43ஆ.** 43அ என்னும் பிரிவின்கீழ் பல்வைத்தியரொருவராகத் தற்காலிகமாகப் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வோர் ஆளும், பின்வரும் உரிமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) 43அ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டவாறான அத்தகைய தொழிலுக்கான நோக்கத்திற்காக மட்டும் அங்கீகரிக்கப்பட்ட துறைகளில் பல்வைத்தியத் தொழில் புரிதல் ;

(ஆ) அத்தகைய தொழில் பற்றிய நியதிகளின்படி அவர் உரித்துடையவராக விருக்கக்கூடியவாறான அத்தகைய ஊதியத்தையும் அல்லது அறவீடுகளையும் சட்ட நீதிமன்றமொன்றில் அறவிட்டுக்கொள்ளுதல் ; அத்துடன்

(இ) பல்வைத்தியத்தொழில் புரிவதற்கான தகைமையொன்றாகக் குறித்துக் காட்டுகின்றதான ஏதேனும் பெயரினை அல்லது பட்டப் பெயரினைப் பயன்படுத்துதல்,

ஆனால், பிரிவு **43** இன்கீழ் பதிவு செய்யப்பட்ட பல்வைத்தியரொருவரின் ஏனைய உரிமைகள், சிறப்புரிமைகள் அல்லது விடுபாட்டு உரிமைகளுக்கு உரித்துடையவராதலாகாது.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்